1972 ஆகஸ்டு 9]

(இ) இந்த அலுவலகங்களில் நாளொன்றுக்குச் செய்யப்படும் சராசரி பதிவுகளின் எண்ணிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது குறித்த விவரங்கள் @ சட்டமன்ற பேரவை முன் வைக்கப்பட்டுள்ளன.

* 16. Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the Graduate Registrants with the Employment Exchanges for the physically handicapped as on 31st December, 1971?

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் கணக்கின்படி, உடல் ஊனமுற்றோருக்கான வேலே வாய்ப்பகத்தில் பதிவு செய்து கொண்ட பட்டதாரி கள் பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 31-12-1971 அன்றுள்ளபடி, சென்னே நந்தனத்திலுள்ள உடலூனமுற்றவர்களுக்கான வேலே வாய்ப்பகத்தின் நடப்புப் பதிவேட்டில் 40 பட்டதாரிகள் பதிவு செய்து கொண்டிருந்தனர். அவர்களில் 33 பேர்கள் ஆண்கள். இவர்களில், ஒருவர் குருடர், இருவர் செவிடர், 30 பேர் முட மானவர்கள் ஆவர். எஞ்சிய 7 பேர் பெண்கள். இவர்களனைவரும் முடமான வர்களாவர்.

THIRU D. SANTOSHAM : Sir, have instructions been given to the Public Service Commission and other employing agencies that preference should be given to those physically handicapped persons, who are found fit for clerical job or any other similar job?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படி உடல் ஊனமுற்றவர்களுக் கெல்லாம் ஒரு குறிப்பிட்ட சதவித வேலே வாய்ப்பு ஒதுக்கப்பட வேண்டுமென்ற கொள்கை இருக்கிறது. ஆனுல் இதற்கான முடிவு எடுக்கப்படவில்லே. இப்போது இந்த வேலே தேடித்தரும் துறையிலே ஒரு பிரிவு செயல்பட்டு எப்படி அதிகமாக இவர்களுக்கு வேலே வாய்ப்பு பெற்றுத் தர வேண்டுமென்ற முயற்சியில் இருக்கிறது. கட்டாயமாக பப்ளிக் சர்வீஸ் கமிஷனே அல்லது தனியார் துறையோ இத்தனே சத வீதம் எடுக்க வேண்டுமென்று இல்லே. அப்படி வேலேக்கு எடுக்கப்பட்டவர்களுக்கு உற்சாகம் ஊட்டும் வகையில் பரிசுகள் மற்றவைகள் கொடுத்து ஊக்குவிக்கிறோம்.

@94-96-ஆம் பக்கங்களில் இணைப்பு -ஆக அச்சிடப்பட்டுள்ளது.

Thiru A. R. DAMODARAN : In view of the fact that frequent controversies occur in the State Transport Department between the conductor and passengers, will the Government consider the desirability of appointing dumb people as conductors—physically handicapped—in the State Transport Department? (Laughter)

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த நாட்டில் யாரையும் ஊமைகளாக, செவிடர்களாக ஆக்க இந்த அரசாங்கம் விரும்பவில்லை.

Sennampatti Anicut.

* 17. Q.—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the amount of estimate at which the Sennampatti Anicut Scheme in Aruppukkottai taluk, Ramanathapuram district has been prepared;

(b) whether the Government have sanctioned the scheme; and

(c) if so, when the work will be started?

சென்னம்பட்டி அணைக்கட்டுத் திட்டம்

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை தாலுகாவில் சென்னம்பட்டி அணைக்கட்டுத் திட்டத்தை எவ்வளவு மதிப்பீட்டுத் தொகையில் தயாரித்துள்ளார்கள்?

(இ) இந்தத் திட்டத்திற்கு அரசாங்கம் அனுமதி அளித்து விட்டதா?

(உ) ஆம் எனில், வேலை எப்பொழுது துவங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இராமநாதபுரத்தில் அருப்புக்கோட்டை வட்டத்தில் கவுண்ட நதிக்குக் குறுக்கே ஒரு அணை கட்டுவதற்காக, 24.60 லட்சம் ரூபாய் செலவில், வரை படங்களும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டுள்ளன.

(இ) இல்லை.

(உ) இல்லை.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு எவ்வளவு, புதிய பாசன நிலங்கள் எவ்வளவு இதன் கீழ் வரும் என்பதைத் தெரிவிப்பார்களா?